# தேவனுடைய ராஜ்யம்
# THE KINGDOM OF GOD

பின்வரும் சிறுபகுதியும், 1987இல் என் மனைவி ஹில்டா (Hilda) வும் நானும் **“தேவனுடைய ராஜ்யம்”** என்னும் தலைப்பில் வெளியிட்ட புத்தகத்தின் முன்னுரையின் முதல் பத்தியும் ஒன்றுதான். இப்புத்தகம் எங்களது இணையதளத்தில் ஆங்கிலத்திலும், தெலுங்கிலும் பயன்பாட்டில் உள்ளது. www.kingdomofchrist.info

**இல்லினாய்ஸ்** (Illinois) **மாகாணத்தில் ராக் ஃபோர்ட்** (Rock Ford) **பகுதியில் உள்ள கில்பர்ன் அவெனியூ** (Kilburn Avenue) **கிறிஸ்துவின் சபையில் வேத வகுப்பில் பல ஆண்டுகள் பாடம் நடத்தினதின் பயனாக தேவனுடைய ராஜ்யம் என்ற புத்தகம் வெளிவந்தது. சபையில் நடத்தப்பட்ட வேத வகுப்புகளில் பாடம் நடத்தி வந்த சிறு எண்ணிக்கையிலான போதகர்களாகிய நாங்கள் வாரந்தோறும் ஒன்றாகக் கூடிவந்து, நடத்தும் பாடங்களை எழுதி வைப்பது எங்களுக்கு வழக்கமாக இருந்தது.**

எங்களிடம் பாடம் பயின்றவர்கள் விசுவாசிகள் தான். அவர்களுக்குள் எங்களுடைய பிள்ளைகளும், சகோதர சகோதரிகளும் இருந்தார்கள். வேதாகமம் பேசுகிற இடத்தில் பேசி, அது அமைதியாக இருக்கிற இடத்தில் அமைதியாக இருக்கவேண்டும் என்று எங்களுக்கு போதிக்கப்பட்டிருந்தபடியே தேவனுடைய வார்த்தையை போதிக்கும் உன்னதமான கடமையை போதகர்களாகிய நாங்கள் நிறைவேற்றி வந்தோம். சபைக்கென்று இருந்த வேதாகமப்பள்ளியின் பாடத்திட்டத்தில் நாங்கள் விரும்பும் பாடத்தையோ, பாடத் தொகுப்பையோ சேர்த்துப் போதிக்கக்கூடிய ஒரு முறை அங்கே இருந்தது. இதன் அடிப்படையிலான எங்கள் தீர்மானமே “தேவனுடைய ராஜ்யம்” புத்தகத்தின் பாடங்களை உருவாக்குவற்குத் திறவுகோலாக அமைந்தது.

இந்தத் திறவுகோல் என்னவென்றால், ஏற்கனவே நாங்கள் கற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் எங்களுக்குள்





உண்டாகியிருந்த முன் அனுமானங்களை அகற்றிவிட்டு, மார்க்க விஷயத்தில் எங்களை அடைத்து வைத்திருக்கும் வாழ்க்கை பெட்டியிலிருந்து எங்களால் முடிந்த அளவுக்கு வெளியே வந்து விடவேண்டும் என்ற எங்களது தீர்மானமே ஆகும். ஒவ்வொரு பாட சம்பந்தமான வசனங்களையும், அவைகள் எழுதப்பட்டபோது எந்த அர்த்தத்தில் எழுதப்பட்டனவோ அதே அர்த்தத்தில் அவைகளைக் கற்றுக்கொள்வது நாங்கள் அடுத்ததாக எதிர்கொண்ட சவாலாகும். வசனங்கள் எழுதப்பட்ட உண்மையான அர்த்தங்களின் அடிப்படையிலும், சூழ்நிலைகளின் அடிப்படையிலும், எங்கள் ஒவ்வொருவருடைய முடிவுகளும் இருக்கவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள். இந்த முறை அடிப்படையில் நாங்கள் படித்தது, தேவனுடைய ராஜ்யத்தைக் காணும்படி எங்களுக்கு உதவி செய்தது. நாங்கள் கற்றுக்கொண்டு நம்பின விஷயங்களின் வாயிலாக எங்களுக்குள் உருவான விசுவாசமே தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்தைக் காணும்படியான கதவைத் திறந்துவிட்டது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக எங்களை அர்ப்பணித்து, “திறந்த மனதோடு” வேதாகமக் காரியங்களை படித்து, எழுதி, எங்கள் சொந்தக் கருத்துக்களை திருத்திக்கொண்ட பிறகே இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது.

தேவனுடைய ராஜ்யத்துக்குரிய எங்களுடைய பாடத்திலே எங்களுடைய அனுமானங்களை விட்டு விடுவது ஏன் அவசியமாயிருந்தது? ஏனென்றால், சபையும், ராஜ்யமும் ஒன்றென்று எங்களுக்குப் போதிக்கப்பட்டிருந்தது. எபேசு பட்டணத்தில் தேவனுக்கென்று சபையைக் கட்டும் ஊழியத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு உதவியாயிருந்த அப்போஸ்தலனாகிய பவுல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்தது ஏன் என்று எங்களுக்குப் புரியவில்லை. *அப். 19:8.* இயேசு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை ஏற்படுத்த வந்தது உண்மையானால், அவர் ஏன் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிப் போதித்தார் என்பது எங்களுக்குப் புரியாததாய் இருந்தது. *லூக்கா 4:43.* “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” என்று இயேசு கிறிஸ்து சொன்ன பிற்பாடும், தேவனுடைய ராஜ்யத்தைப் புரிந்துகொள்ளவும்,

அதைக் குறித்துப் பிரசங்கிக்கவும் வேண்டிய வல்லமையை அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுத்தது ஏன்? *மத்தேயு 28:18.* தேவனுடைய ராஜ்யத்துக்கு ராஜாவாக இயேசு கிறிஸ்துவானவர் முடிசூட்டப்பட்ட பிற்பாடு, **தேவனுடைய ராஜ்யம்** வல்லமையோடு வருவதாக நாம் வாசிக்கிறோமே, அது ஏன்? பார்க்கவும். *லூக்கா 22:29,30; யோவான் 18:36; அப். 1:4-8; 2:36; 5:31; 2 பேதுரு 1:11.* நசரேயனாகிய இயேசுவை தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் பேதுரு அறிவித்து விட்ட பிற்பாடும், பிலிப்பும் பவுலும் தொடர்ச்சியாக தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தது ஏன்? *அப். 2:36; 8:12; 20:25.*

தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே இருக்கின்ற ஒரு சுதந்தரத்தைப் பற்றி பவுல் பேசினான். *எபே. 5:5.* இரண்டு ராஜ்யங்கள் இருக்கின்றன என்பது இதின் அர்த்தமா? இல்லையென்றால் இதின் அர்த்தம் தான் என்ன? "வேதாகமம் பேசுகிற இடத்திலே பேசவேண்டும்" என்பதின் அடிப்படையில் "கிறிஸ்துவின் சபைகள்" தேவனுடைய ராஜ்யமாய் இருக்கின்றன என்ற நமது அனுமானத்தை தூர வைத்துவிடவேண்டும். பரிசுத்த வேதாகமத்தை இயல்பாக வாசிக்கும் ஒருவர் தேவனுடைய ராஜ்யம், கிறிஸ்துவின் ராஜ்யம் என்னும் சொற்றொடர்கள் இரகசியமானவைகள் அல்ல என்று தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். தேவனுடைய ராஜ்யத்தையோ, கிறிஸ்துவின் ராஜ்யத்தையோ ஸ்தாபிக்கும்படியாக சபையை யாரும் பிரசங்கிக்கவில்லை என்பது நமக்குத் தெரியும். **புதிர்** : இது எப்படி உண்மையாகும்? அப்போஸ்தலர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கித்தார்கள். ஆயினும், கிறிஸ்துவின் ராஜ்யத்தையும், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சபையையும் நாம் அறிந்திருக்கிறோம்.

முதிர்ச்சிப் பெற்ற கிறிஸ்தவர்கள், தேவனுடைய வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு மற்றவர்களையே சார்ந்திருக்கின்றார்கள்; இந்த வியாதியிலிருந்து அவர்கள் விடுதலை பெறும்படி உதவுவதற்காகவே இப்பாடத் தொகுப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. கிறிஸ்துவின்





ஆவிக்குரிய ராஜ்யத்தில், அவருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாக வாழ்கின்ற வளர்ச்சிப் பெற்ற கிறிஸ்தவர்கள், தங்கள் விசுவாசத்தின் பிரயோஜனத்திற்கென்று பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தங்களுடைய அனுமானங்களின் அடிப்படையிலேயே வேதாகமத்தைக் கற்றுக்கொள்ளும் பழக்கத்திற்கு அடிமைப் பட்டிருக்கிறவர்கள் விடுவிக்கப்படும் வகையில் இப்பாடங்கள் அமைந்துள்ளன. கிறிஸ்தவர்களாகிய நாம் ஏற்கனவே அறிந்திருக்கும் காரியங்களைத் தற்காலிகமாகச் சற்றுத் தூரம் தள்ளி வைத்துவிட்டு, தேவன் அவருடைய ராஜ்யத்தைப் பற்றி நமக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறார் என்பதை கவனிக்கப் பழகிக்கொள்ளவேண்டும்.

போதகக்குழுவில் உள்ள போதகர்களும், நானும் மேலே குறிப்பிட்ட கேள்விகளைப் பற்றி என்ன கற்றுக்கொண்டோமோ, அதையே இந்த முன்னுரையின் மீதமுள்ள பகுதியில் தெரிவித்திருக்கிறோம். தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய காரியங்களை எப்படிப் போதிப்பது என்பது எங்களுக்குப் புரியவில்லை. எங்கள் சொந்த அனுமானங்களாகிய பெட்டியிலிருந்து வெளியே வந்து, வேத வசனங்கள் என்ன சொல்லுகின்றன என்பதை சிந்தித்துப்பார்க்கும்படியாக எங்களை நாங்கள் பக்குவப் படுத்திக்கொள்ளவேண்டும்.

குறிப்பிட்டுள்ள எல்லா வசனங்களையும் தயவுகூர்ந்து வாசியுங்கள். **தேவன்** மனுக்குலத்தைப் பற்றியும், அவருடைய ராஜ்யத்தைப் பற்றியும் **சொல்லியிருக்கின்ற விவரங்களையெல்லாம்** மனதில் கொண்டு அவைகளைக் கருத்தாய் கவனியுங்கள். ஒரு கதை என்று சொன்னால் அதில் ஒருவர் இருப்பார், அவருக்கு இலட்சியம் இருக்கும், அதை நிறைவேற்ற விடாமல் தடுக்கும் எதிரிகளும் இருப்பார்கள். அந்தக் கதையை வாசிக்கிறவர், அவர்களுடைய சதிச் செயல்களையும், அவைகள் எப்படி முடிவுக்கு வருகின்றன என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். தேவன் எதற்காக, எப்படி மனுக்குலத்தை உண்டாக்கினார் என்று அவரே விவரிக்கின்றார். அவருடைய இலட்சியத்தை எதிர்க்கும்படியாக சாத்தானையும் அவரே அனுமதிக்கிறார். இங்கு நம் ஒவ்வொருவருக்கும்

சதிச் செயல் நடைபெறுகிறது. நம்மைப் பார்த்து நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இதுதான்: நாம் தேவனுடைய ராஜ்யத்துக்குரியவர்களா? அல்லது, சாத்தானுடைய ராஜ்யத்துக்குரியவர்களா? இயேசுவானவர் பவுல் செய்யவேண்டிய ஊழியத்தின் நிமித்தம் ஆணையிட்டுச் சொன்னபோது, இந்த இரண்டு எதிரெதிர் சக்திகளையும் குறிப்பிட்டார்: “அவர்கள் என்னைப்பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் **இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும்** திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்பு கிறேன் என்றார்.” *அப்போஸ்தலர் 26:18.*

தேவனுடன் நாற்பதாண்டு காலமாக “முகமுகமாய்” பேசி வந்தவன் மோசே, இவன் அவருடைய நித்தியத் தன்மையைப் பற்றி பேசியிருக்கிறான். *உபாகமம் 33:27.* தேவனிடமிருந்து நன்மையை அனுபவித்து வந்த தாவீது, “உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது” என்று கூறுகிறான். *சங். 145:13.* நாம் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிப் பேசாமல், தேவனைப் பற்றியும், மனுக்குலத்தைக் குறித்த அவருடைய சித்தத்தைப் பற்றியும் பேசவே முடியாது. ஒரு தேவன் இருக்கின்றார், ஆகையால் ஒரு நித்திய ராஜ்யமும் இருக்கின்றது.

*1 தீமோ. 6:13-16.* நித்தியம் என்றால் தேவனுடைய ராஜ்யம் அவருடன் பரலோகத்திலேயே, காலம் துவங்கும் முன்பே இருந்தது என்று அர்த்தம்.

இஸ்ரவேல் தேசத்தின் ராஜ்யத்தை தேவனே ஆளுகை செய்து வந்தார். *1 நாளா. 28:5.* இயேசுவானவர் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இஸ்ரவேலுக்குப் பிரசங்கித்தார். *லூக்கா 4:43.* பரிசுத்த ஆவியின் வல்லமையினால் யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் போதிக்கும்படியாக அவர் தம்முடைய அப்போஸ்தலருக்கும் பயிற்சிக் கொடுத்தார். *அப்போஸ்தலர் 1:1-8.*





இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக, இஸ்ரவேலின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் அவரை வற்புறுத்திக் கேட்டபோது, “தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்” என்று கூறினார். *மத்தேயு 21:43.* கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களும், தேவனுடைய வார்த்தையின் போதகர்களுமாய் நாற்பதாண்டு காலத்திற்கு முன்பு ஒன்றாக இணைந்து வேலை பார்த்த நாங்கள், இரண்டு கேள்விகளில் அதிகமான கவனம் செலுத்தினோம்: தேவனுடைய ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்ட ஜனங்கள் யார்? தேவன் விரும்புகின்ற கனிகள் எவை?

யோவான்ஸ்நானன் கனியைக் குறித்தும், ஆபிரகாமுடைய பிள்ளைகளைக் குறித்தும் யூதர்களுடன் பேசும்போது, “மனந்திரும்புதலுக்கு ஏற்ற **கனிகளைக்** கொடுங்கள்; ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே **ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை** உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல **கனி கொடாத** மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.” *லூக்கா 3:8,9.* இயேசுகிறிஸ்துவும், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்த நேரங்களில் இந்த இரண்டு தலைப்புகளைப் பற்றி அடிக்கடி பேசிவந்தார். *மத்தேயு 8:10-12; 12:33-37; 13:18-23.* ஆபிரகாமுடைய பிள்ளைகளைப் பற்றிக் கற்றுக்கொள்ளவும், அவர்களோடு தொடர்புபடுத்தி தேவனுடைய படைப்பாகிய மனுக்குலத்திலிருந்து அவருடைய ராஜ்யத்திற்கென்று இயேசுவானவர் கொண்டுவரும் கனியைப் பற்றிக் கற்றுக்கொள்ளவும் உதவும் வகையில் இப்பாடத் தொகுப்பில் ஒவ்வொரு பாடமும் அமைந்துள்ளது. தேவன் விரும்புகின்ற கனியைக் கொடுக்கும்படியாக அவர் மனுக்குலத்தைப் படைத்தார். தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும், அவருடைய குமாரனுடைய ராஜ்யத்தைப் பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் நாம்

படிக்கும்பொழுது, பிதாவாகிய தேவனையும், இந்தக் கனியையும், அவருடைய பிள்ளைகளையும் தனித்தனியே பிரித்தெடுக்க முடியாது என்பதை புரிந்துகொள்ளமுடியும். *எபேசியர் 5:5; பிலிப்பியர் 2:14-16; கொலோசெயர் 1:10-14.* வாரத்தின் முதல் நாளிலே நாம் தேவனைத் தொழுதுகொள்ளுகின்ற செயல் முறையும், புதுப்பிறப்புக்கான செயல் முறையும், முக்கியமான உபதேசங்களாக இருக்கின்றன. இருப்பினும் பரிசுத்த வேதாகமத்தை நாம் கற்றுக்கொள்ளும்பொழுது, தேவனுடைய சிருஷ்டிப்பாகிய மனுக்குலம் அவருக்கென்று கனி கொடுப்பதே தேவனுடைய நோக்கம் என்று முக்கியமாகப் பேசப்படுகிறது.

*ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. எப்படியெனில், பரிசுத்தஞ் செய்கிற வரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப் படாமல்: உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்; நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார். ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக்*





*கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார். எபிரெயர் 2:10-16.*

இது ஒரு சிக்கலான கதை; யுகம் யுகமாக "சமய வியாபாரத்தில்" ஈடுபட்டுவரும் மக்கள் இந்தக் கதைப் பின்னலை குழப்பமாக்கி வைத்திருக்கிறார்கள். இந்த உலகம் உருவாவதற்கு முன்பே மனுக்குலத்துக்காக தேவனுடைய மனதில் இருந்த இலட்சியத்தை அறிவிப்பதிலிருந்து கதை ஆரம்பிக்கின்றது. *1 கொரி. 2:6-10; ரோமர் 8:28-30.* எல்லாரைப் பற்றியும் தேவனுடைய குறிக்கோள் ஒன்றுதான். **இக்காலத்தில்** கிறிஸ்தவர்கள் சந்தித்து வரும் **போராட்டங்களில்** ஜெயிப்பதற்காக அவர்களுக்குக் கிருபை அளிக்கவேண்டும் என்று உலகத்தோற்றத்திற்கு முன்பே அவர் தீர்மானித்திருந்தார். *எபேசியர் 1:3-14; 1 பேதுரு 1:18-21; தீத்து 1:1-3;* இங்கு கிறிஸ்தவனுடைய விசுவாசமே தேவனுடைய நோக்கமாயிருக்கிறது, தேவனுடைய ராஜ்யத்தின் சுதந்தரம் நிபந்தனைக்குட்பட்டது. "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன்; அவன் என் குமாரனாயிருப்பான்." *வெளி. 21:7.* அப்போஸ்தலனாகிய பவுல் *ஏசாயா 43:5-7* உட்பட இன்னும் சில வசனங்களை மேற்கோள்காட்டி இக்கதையினை சுருக்கமாக நினைவுபடுத்திச் சொல்கின்றான்.

*"ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள்* **எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று** *சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்." 2 கொரி. 6:17,18.*

இப்பொழுது தேவனுடைய ஆளுகை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த உலகம் அழிந்துவிட்ட பிற்பாடும் அது என்றென்றும் இருக்கும். *1 கொரி. 15:24-28.* தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் அவருடைய **சித்தம்** இந்தப் பூமியிலும், பரலோகத்திலும்

நிறைவேறிக்கொண்டிருக்கிறது. *மத்தேயு 6:10.* தேவன், தாம் உருவாக்கின இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்யும் அதிகாரம் உடையவராயிருந்தார்; அப்படியிருந்தாலும் அவர்களுடைய நடத்தை தேவன் விரும்பியது போல் இருக்கவில்லை. தேவனுடைய மனதில் இருந்த எண்ணமும், அவர்களுடைய நடத்தையும் ஒன்றாக இருக்கவில்லை. யாக்கோபு மூலமாய் உருவான ஆபிரகாமுடைய சந்ததியினிமித்தம் தேவனுடைய மனதில் இருந்தது என்ன என்பதை தெரிந்துகொள்ள இந்த வசனங்களை தயவுகூர்ந்து வாசியுங்கள். *ஆதி. 12:1-3; யாத்திராகமம் 19:5; ரோமர் 9:3-5.* யூதருடைய வாழ்க்கை முறையில் அவருடைய சித்தம் வெளிப்படவில்லை. *ரோமர் 2:17-24.* தேவன் எல்லா மனிதரையும் தமது அடிமைகளாகவோ, இயந்திரங்களாகவோ படைக்காமல், தமது பிள்ளைகளாக இருக்கும்படியாகவே படைத்திருக்கின்றார். இதனால் தான் அவர் தமது சித்தத்தை செய்யும்படியாக மனுக்குலத்தை கட்டாயப்படுத்தியது மில்லை, கட்டாயப்படுத்துவதுமில்லை.

தேவனுடைய ராஜ்யம் எப்பொழுதும் இருக்கிறது. *மத். 6:10*இல் இயேசுவின் ஜெபம் நமக்குத் தெரிவிப்பது என்னவென்றால், தேவனிடம் அன்புகூரக் கற்றுக்கொள்பவர்கள் அவருடைய ராஜ்யத்துக்குரிய பண்பாட்டையும், வாழ்க்கை முறையையும் தங்களுக்குள் முழுமையாகக் கொண்டுவரவேண்டும் என்பதே. பூமியில் இருக்கும் தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய சித்தம் அவருடைய மக்களுடைய வாழ்க்கையில் இந்நேரம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. தேவனுடைய சித்தம் நிறைவேறும்படியாகவே இயேசு பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்தார். *யோவான் 4:34; 5:19,30; 6:38; பிலிப்பியர் 2:5,11.* ஆகையால், தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்று இயேசு பிரசங்கித்தார். கிறிஸ்தவர்கள், தேவனுடைய ராஜ்யத்தை பற்றியும், அவருடைய பிள்ளைகளாகத் தங்கள் பங்கு என்ன என்பதையும் புரிந்துகொண்டு, அதன் மீது விசுவாசம் கொண்டு கீழ்ப்படியும்போது, தேவனுடைய சித்தத்தை அங்கீகரிக்கிறார்கள். *ரோமர் 1:5; மத்தேயு 4:17.* பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து, தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வரும் என்று





கேட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் அவர்களுக்குச் சொன்ன பதில் அவர்களையும், அவருடைய சீஷர்களையும் கூட அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்றும் நம்மால் புரிந்துகொள்ளமுடியும்.

*“தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.” லூக்கா 17:20,21.*

இயேசு பிலாத்துவிடம், “என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல” என்று கூறினார். *யோவான் 18:36.* பரலோகத்திலிருக்கிற தேவனுடைய நித்திய ராஜ்யத்தைக் குறித்து இயேசு பிரசங்கித்தார். இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து அழைக்கப்பட்டவர்களே இயேசுவின் ராஜ்யத்தின் குடிமக்களாயிருக்கிறார்கள். வெளியே அழைக்கப்பட்ட மக்கள் கூட்டமாகிய சபையிலிருக்கும் நாம் நம்முடைய பாவங்களிலிருந்தும், மரணத்திலிருந்தும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். *1 கொரி. 1:30;6:11.* நம்முடைய புதிய பிறப்பின்போது இது நிகழ்ந்தது; ஆகையால், “கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.” *எபே. 2:7.* பார்க்கவும் *யோவான் 3:3; 5:24; ரோமர் 6:2-4.*

மனிதர்களில் யாரெல்லாம் தங்களை தேவன் படைத்ததற்கான தேவனுடைய திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் எல்லாருடைய வாழ்க்கையையும் ஆளுகை செய்யும் மொத்த அதிகாரமும் இயேசுகிறிஸ்துவினிடத்தில் இருக்கின்றது. *1 கொரி. 2:7; 2 தீமோ. 1:8-10; வெளி. 1:4-7.* அவருடைய நித்திய ராஜ்யத்தில் தேவனுடைய பிள்ளைகளாக நம்மை நிலைநிறுத்தவேண்டும் என்ற பிதாவின் சித்தத்தை

நிறைவேற்ற இடையூறாக இருக்கின்ற சகல வல்லமைகள் மீதும், அவர் முழு அதிகாரம் பெற்றிருக்கின்றார். *எபேசியர் 1:18-23; 3:10,11; 6:10-18.* இயேசுவின் ராஜ்யத்தை இப்படியாகப் புரிந்துகொள்கிறோம். பிதாவாகிய தேவனானவர் அநேகம் பிள்ளைகள் மகிமையில் வந்து சேரவேண்டும் என்று விரும்புகிறார். பிதாவின் இந்தச் சித்தத்தை நிறைவேற்றக்கூடிய சகல அதிகாரத்தையும் இயேசு பெற்றிருக்கிறார். இந்த ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே பிதாவின் ராஜ்யத்துக்குள் இயேசுவின் ராஜ்யம் செயல்படுகிறது. “சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தி னாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது.” *1 கொரி. 15:27.* இயேசுவை ராஜாவாகவும், பிரதான ஆசாரியராகவும் ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய பங்கு பெரிதாயிருக்கிறது. *2 கொரி. 1:3-4; யாக்கோபு 1:16-18.* அவர் கிறிஸ்தவர்களுக்கு “அன்பான ” பிதாவாக இருக்கிறார். *2 கொரி. 1:3-4; கலாத்தியர் 4:6-7.* “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் *பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது;* அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.” *யாக்கோபு 1:17.*

விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் மறுபடியும் பிறப்பிக்கப்பட்டு, தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்பட்டிருக்கிறார்கள். “ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.” *கொலோசெயர் 3:3.* நாம் தேவனுக்குள்ளும் “கிறிஸ்துவுக்குள்ளும்” வாசஞ்செய்கிறோம். தேவனுடைய ராஜ்யத்திலிருந்து கிறிஸ்துவின் ராஜ்யத்தைத் தனிமைப்படுத்தக்கூடாது. நாம் தொடர்ச்சியாக வளரும் பொருட்டு, இயேசுவின் உபதேசங்களை புரிந்துகொண்டு, நம்பி, அவைகளின்மீது நம்முடைய விசுவாசத்தை வைக்கிறதினால், தேவனுடைய நித்திய ராஜ்யத்துக்குரிய பழக்கவழக்கங்கள் நம்முடைய இருதயத்திலும்,





சிந்தனையிலும் நிறைந்துவிடுகின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய ராஜ்யத்தின் சமூகத்துக்குரிய பழக்கவழக்கங்களை செயல்படுத்துகின்றபொழுது, அவைகளால் சுத்திகரிக்கப்படுகிறோம். *2 தெச. 2:13-14.* புதிய உடன்படிக்கைக்குரிய சட்டதிட்டங்களை தேவன் கிறிஸ்தவர்களுடைய இருதயங்களிலும், சிந்தனைகளிலும், எழுதுவதன் மூலமாகத் தமது ராஜ்யத்துக்குரிய பழக்கவழக்கங்களை ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய “உள்ளான மனிதனிலும் பதிய வைக்கின்றார்” *எபிரெயர் 10:16-17.* “இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.” *2 கொரி. 5:17.* கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிப்பை நமது இருதயங்களிலும், சிந்தனைகளிலும் ஏற்றுக்கொள்வதன் மூலமாக, தொடர்ந்து நம்முடைய “உள்ளான மனிதனை” புதுப்பித்துக்கொள்ளுகின்றோம். *எபே. 4:22.*

நமது ராஜாவாகிய இயேசு கிறிஸ்து, தேவனுடைய ராஜ்யத்தில் எப்படி வாழவேண்டும் என்பதை தம்முடைய போதனையின் மூலமாகவும், வாழ்க்கையின் மூலமாகவும் காண்பித்தார். ராஜ்யத்தில் வாழவேண்டிய வாழ்வின் தன்மையினை உவமைகள் மூலமாக விளக்கிச் சொன்னார். அநேக உவமைகள் சக்தி வாய்ந்த அந்தப் பண்பாட்டினை புரிந்துகொள்ளக்கூடிய வகையில் “இயல்பான மொழி நடையில்” வெளிப்படுத்துகின்றன. அவர் தம்முடைய சீஷர்களிடம், “பரலோகராஜ்யத் -தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை” என்று கூறினார். *மத்தேயு 13:11.* கிறிஸ்தவர்களாகிய நாம் அந்த ராஜ்யத்துக்கு இடமாற்றம் பண்ணப்பட்டா லொழிய அதைக் குறித்துச் சீரான சிந்தனை நமக்கு இருக்க வாய்ப்பில்லை. நாம் இன்னும் அதை சுதந்தரிக்கவில்லை, ஆனால், “ஜெயங்கொள்ளு கிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.” *வெளி. 21:7.*

அந்த ராஜ்யத்துக்குரிய பழக்கவழக்கங்கள் நம்முடைய உள்ளான மனிதனுக்குள் ஊடுருவி இருக்கின்றன. உலகத்திலுள்ள சாத்தானுடைய

ராஜ்யத்தின் செயல்பாடுகளை நாம் வெற்றிக்கொள்ள ஆரம்பிக்கிறோம். *எபேசியர் 2:1-3; 1 யோவான் 2:15-17.* தேவனுடைய ராஜ்யத்தில் பிள்ளைகளாக இருக்கும்படியாகவே நாம் சிருஷ்டிக்கப்பட்டோம்; ஆகையால், நாம் விசுவாசமுள்ள பிள்ளைகளாயிருந்தால், சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வோம் என எதிர்பார்க்கமுடியும். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறோம். அந்த ராஜ்யமும் நமக்குள் இருக்கின்றது. "தேவனே சகலத்திலும் சகலமுமா யிருக்கின்றார்", அவரிடம் இயேசு அந்த ராஜ்யத்தையும் அதிலிருக்கிற நம்மையும் திரும்ப ஒப்படைத்துவிடுவார். *1 கொரி. 15:24-28.* படைப்பை பற்றிய பிதாவாகிய தேவனுடைய நோக்கம் நிறைவேறும்படியாகவே அவருடைய ராஜ்யத்திற்குள் இயேசுவின் ராஜ்யம் செயல்பட்டுவருகிறது. தேவனுடைய சித்தத்தையே இயேசு எப்பொழுதும் நிறைவேற்றுவதால் இந்தக் கருத்தினை நாம் புரிந்துகொள்ளமுடியும்.

தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கப்போகின்ற அவருடைய மக்களின் எதிர்காலத்தையும், அந்த ராஜ்யத்தின் எல்லையையும், அமைப்பையும், பண்பாட்டையும் இயேசுவின் பிரசங்கம் வெளிப்படுத்தியது. இதை மனதில் கொண்டு, உவமைகளை நாம் படிக்கின்றபோது, பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை நம்மால் புரிந்துகொள்ளமுடியும். சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து வெளியே வரும்படி கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ற தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களுடைய வாழ்க்கையில் இந்த இரகசியங்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களே "வெளியே அழைக்கப்பட்ட" மக்கள் – சபை. அப்போஸ்தலனாகிய பவுல் ஊழியஞ்செய்யும்படியான கட்டளையை பெற்றுக்கொண்டபோது, இரண்டு ராஜ்யங்களைப் பற்றியும் ஆண்டவர் குறிப்பிடுகின்றார். இந்தக் கருத்துக்களை நாம் மனதிற்கொண்டு சபை என்ற வார்த்தையை கவனித்தால், புதிய ஏற்பாட்டில் அது எந்த அர்த்தத்தில் பயன்படுத்தப் படுகின்றது என்று புரிந்துகொள்ளமுடியும்.

*அப்பொழுது நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அதற்கு அவர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே. இப்பொழுது*





*நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும், சாட்சியாகவும் ஏற்படுத்துகிற தற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுயஜனத்தாரிடத் தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலை யாக்கி, அவர்கள்* **என்னைப்** *பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள்* **இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு** *நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். அப். 26:15-18.*

பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலே தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்த பிலிப்பு, பவுல் போன்றவர்களின் பிரசங்கத்தை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளே "சபை" என்று குறிப்பிடப்படுகிறார்கள். *அப்போஸ்தலர் 2:41,47;4:32;5:11;8:12;19:8; 20:25;28:31.* தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் பிள்ளைகளை உருவாக்கும் அவருடைய திட்டம் இயேசுவினுடைய ஆளுகையின் மூலமாக நிறைவேறவேண்டியதாயிருந்தது. இந்த ஆளுகைக்கான ஆயத்த வேலை அவர் சிலுவையில் மரித்து மகிமைப்படும் வரையிலும் நிறைவடைய வில்லை. *யோவான் 7:37-39; லூக்கா 21:14-22.* இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டு, தேவனுடைய புதிய உடன்படிக்கை பிரதிஷ்டைபண்ணப் பட்டாலொழிய கிறிஸ்துவுக்குள்ளான புதிய ஆளுகை இடம்பெற முடியாத நிலை இருந்தது. *எபிரெயர் 8:10-12.* தேவனுடைய பிள்ளைகளின் சுத்திகரிப்பு நிறைவேறுவதற்கு பரிசுத்த ஆவியானவருடைய சேவை அவசியமாய் இருந்தது. குற்றமுள்ள மனச்சாட்சி உடைய மக்களுடன் பரிசுத்த ஆவியானவர் ஐக்கியமாக இருக்கமுடியாது. *எபிரெயர் 9:6-14; 2 கொரி. 13:14.* இயேசு உயிர்த்தெழுந்து பரம் ஏறின பிற்பாடு, ஆசாரியத்துவத்தையும் ராஜ்ய உரிமையையும் பெற்றுக்கொண்டார். *அப்போ. 2:33-36; 5:31,32; எபிரெயர் 4:14-16.* "என்னைப் பற்றும்"

விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு சுதந்திரம் ஒன்று இருக்கிறதென்று பவுலிடம் இயேசு சொல்வதை கவனியுங்கள். *அப்போஸ்தலர் 26:18.*

"கிறிஸ்துவுக்குள்" என்ற சொல்லை பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் அநேக முறை பயன்படுத்தினான். இருளில் வாழ்ந்து கொண்டிருந்த எபேசு பட்டணத்து மக்களுக்குத் தேவனுடைய ராஜ்யத்தை பிரசங்கித்தான். *அப். 19:8.* "மார்க்கமும்", "சத்தியமும்" தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த அவனுடைய பிரசங்கமும் ஒன்றுதான். *அப். 19:9-10.* மார்க்கமும் சத்தியமுமாகிய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்களே வெளியே அழைக்கப்பட்டவர்கள் ஆனார்கள் – எபேசுவில் இருந்த பரிசுத்தவான்கள். *எபேசியர் 1:1; 1 தீமோ.1:4; வெளி.2:1-5.* இப்படியாக ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் தேவனுடைய சபையை கட்டும்படியாக இயேசு கிறிஸ்துவுடன் இணைந்து பவுல் ஊழியஞ்செய்தான். *மத்தேயு 16:17,19; அப். 20:25; எபே. 2:19-22.*

தேவன் தமக்கென்று பிள்ளைகளை உருவாக்கும்படியாகவே, புதிய உடன்படிக்கையை கொடுத்திருக்கின்றார். *எபி. 8:10-12.* தேவனுடைய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு, இயேசுவை தங்கள் பிரதான ஆசாரியராக அங்கீகரித்திருக்கிற யாவருக்கும் அவர் ராஜாவாக இருக்கின்றார். *அப். 2:36; எபிரெயர் 4:14.* தேவனுடைய நித்திய ராஜ்யத்தோடு இணைந்து இயேசுவின் ராஜ்யம் எப்படி செயல்படுகின்றது என்பதை கவனித்தோமானால், அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் ராஜ்யத்தைக் குறித்துச் சொல்லிய அதே கருத்தினை நாமும் புரிந்துகொள்ளமுடியும்.

*பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு,* **அவராலே** *சகலமும் உண்டாயிருக்கிறது;* **அவருக்கென்று** *நாமும் உண்டாயிருக்கிறோம்.* **இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவர் மூலமாய்ச்** *சகலமும் உண்டாயிருக்கிறது,* **அவர் மூலமாய்** *நாமும் உண்டாயிருக்கிறோம். 1 கொரி. 8:6.*





**அவராலே மற்றும் அவர் மூலமாக** என்ற சொற்களுக்கு இடையில் உள்ள தொடர்பை நாம் சரியாகப் புரிந்துகொண்டால், தேவனுடைய ராஜ்யத்துக்கும், கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கும் இடையில் உள்ள தொடர்பையும் நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் கொரிந்து பட்டணத்திலிருந்த தேவனுடைய மக்களை குறிப்பிடுவதற்கு "கிறிஸ்துவின் சபையார்" என்ற சொற்றொடரை பயன்படுத்தியதற்கான காரணத்தையும், அவர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபங்களில் தேவனுடைய மக்களை குறிப்பிடுவதற்கு "தேவனுடைய சபை" என்ற சொற்றொடரை பலமுறை பயன்படுத்தியதற்கான காரணத்தையும் புரிந்துகொள்வதற்கும் இது உதவியாக இருக்கும். *ரோமர் 16:16; 1கொரி.1:2;10:33;11:16;15:9; 2கொரி.1:1; கலா. 1:13; 1தீமோ. 3:5* வசனங்களிலேயும் தேவனுடைய மக்களை "தேவனுடைய சபை" என்று பவுல் குறிப்பிடுகின்றான். இயேசு கிறிஸ்து தமக்குச் சொந்தமான எந்தவொரு காரியத்தையும் செய்ய பூமிக்கு வரவில்லை. அவர் தம்மை சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்பினதினாலேயே அப்படி ஒப்புக்கொடுத்தார். *லூக்கா 22:42.* மனுக்குலத்தை தேவன் படைத்ததற்கான நோக்கத்தை நிறைவேற்றும்படியாகவே தற்பொழுது இயேசுவானவர் பிரதான ஆசாரியராக ஊழியஞ்செய்து, ராஜாவாக ஆளுகை செய்துகொண்டிருக்கிறார். தேவனுக்கு சபையைக் கட்டும் நோக்கத்திலேயே நான் என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு சொன்னார். அவர் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யும்படி வந்தார். *மத்தேயு 20:28.* பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தொடர்ந்து நிறைவேற்றும்படியாகவே அவருடைய வலதுகரத்தினாலே இயேசு கிறிஸ்து உயர்த்தப்பட்டார். பார்க்கவும் *யோ. 14:13,24,28,31;15:1;16:13; அப். 7:56.*

இயேசு செய்கிற ஒவ்வொரு செயலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதாயிருப்பதால், அவருடைய ராஜ்ய உரிமையும், ஆசாரியத்துவமும் தேவனுக்கு ஊழியஞ்செய்யவே கொடுக்கப்பட்டவைகள் என்று கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ளமுடியும். தேவனுடைய சித்தமும்,

இயேசு கிறிஸ்துவின் சித்தமும் ஒன்றே. ஆகையால், பிதாவாகிய தேவன் விரும்புகின்ற பிள்ளைகளை இயேசுவானவர் அவரிடம் கொண்டு போய் சேர்க்கிறார். *1 கொரி. 15:22-28.* தேவனுடைய படைப்பின் **நோக்கத்தையும்,** ஆதாமும், ஏவாளும் அவருடைய உடன்படிக்கையை முறித்துப் போட்ட பிற்பாடு தேவன் அருளிய **கிருபையையும்** உள்ளடக்கியதாக அவருடைய சித்தம் இருக்கிறது. *2 தீமோ. 1:9.* தேவனுக்குத் தமது படைப்பைப் பற்றி நோக்கம் எதுவும் இல்லாமலிருந்தால், கிருபைக்கும் அவசியம் இல்லாமலே போயிருக்கும். கிருபையானது, "விசுவாசத்தின் மக்களை" குற்றத்திலிருந்து விடுவிப்பதால், தேவனுடைய திட்டத்தில் அது முக்கியமானதாக இருக்கின்றது; இப்படியாக, கிறிஸ்தவர்கள் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நீதிமான்களாக்கப்பட்டு, மறுபடியும் பிறப்பதால் தேவனிடத்திலும், பரிசுத்த ஆவியானவரிடத்திலும் சமாதானம் பெற்றுக்கொள்கிறோம். *ரோமர் 4:25;5:1.* கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாக தேவனுடைய வார்த்தையைப் படித்து, நமது விசுவாசத்தின் கதவினை விரிவாகத் திறக்கின்றபோது, தேவனுடைய ராஜ்யத்தையும், கிறிஸ்துவின் ராஜ்யத்தையும் பற்றிய உண்மைநிலை நமக்குத் தெளிவாகும். *அப். 14:27; 2 கொரி. 3:18.* "அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்" என்று *1 யோவான் 4:13*-ல் யோவான் சொன்னது போல இது நடந்துகொண்டுவருகிறது.

பூமியின் மீது இப்பொழுது வாழ்கின்ற தேவனுடைய மக்களாலான சபையே தேவனுடைய ராஜ்யத்திலும், கிறிஸ்துவின் ராஜ்யத்திலும் "கிறிஸ்துவுக்குள்ளான" தேவனுடைய குடும்பமாயிருக்கிறது. "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" *1 கொரி. 3:16*, என்று பவுல் கொரிந்தியரிடம் கேள்வி கேட்கிறார். "அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்." *எபேசியர் 2:21,22.*





சபை நியாயந்தீர்க்கப்பட்ட பிற்பாடு, ராஜ்யத்தில் நித்திய வாழ்வை அனுபவிக்கத் தகுதி பெற்ற கிறிஸ்தவர்கள் எல்லாரும், பூமி உண்டானது முதல் வாழ்ந்து வந்த எல்லா தேவனுடைய மக்களோடும் கூட ஒன்றாகச் சேர்க்கப்படுவார்கள். *யாக்கோபு 1:12; 2:5; எபி 11:39,40.* "ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள்" எனப்படும் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள் தேவனுடைய ராஜ்யத்தில் மீண்டும் அவரிடம் சேர்க்கப்படுவார்கள். *ரோமர் 9:8,26; வெளி. 2:7,11,17,26-28;3:5,12,21.* தேவன் சகலத்திலும் சகலமுமாய் இருப்பார். சபையென்னும் கருத்தோ, கிறிஸ்துவின் ராஜ்யம் என்னும் கருத்தோ பரலோகத்தில் இருக்காது. சில புதிய பிள்ளைகளுடன் தேவனுடைய ராஜ்யம் மட்டுமே அங்கு இருக்கும்.

சரீரப் பிரகாரமான இஸ்ரவேலருக்கு தேவனுடைய கடைசி தீர்க்கதரிசியாக வந்த கிறிஸ்து இயேசுவானவர், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகத் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து யூதர்களுக்குப் பிரசங்கித்துக் கொண்டுவந்தார். அப்போஸ்தலர்கள் அறிவிக்க இருந்த "விசுவாசத்தின்" நிமித்தம் அவர்களை ஆயத்தப்படுத்துவதே அவருடைய நோக்கமாயிருந்தது. *அப். 2:1-11:18.* "கிறிஸ்துவுக்குள்ளான" புதிய ஆளுகை முதன் முதலாக யூதருக்கே வழங்கப்பட்டது. "கிறிஸ்துவுக்குள்ளான ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் அந்த விசுவாசத்திற்குட்பட்டவை." *எபேசியர் 1:3-14* பார்க்கவும். "கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தை இந்த உலக ராஜ்யத்தில் சாத்தானுடைய ஆளுகையிலிருந்து கிறிஸ்தவர்கள் விடுபட்டு ஒரு புதிய ஆளுகைக்கு உட்படுவதை மட்டும் குறிப்பதில்லை, அவர்களுக்குத் தலைவராக தனித்தன்மையுடைய ஒரு ராஜா செயல்படுகிறார் என்பதையும் குறிப்பிடுகின்றது. ஆகையினால், நம் மனம் புதிதாகின்றது. *1 கொரி. 2:16.* சபை என்பது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. *கொலோ. 1:17,18; எபேசியர் 4:14-16.* இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவமும், பரிசுத்த ஆவியானவருடன் நமக்கு உள்ள ஐக்கியமும், கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் தேவன் எதிர்பார்க்கின்ற கனிகளை நாம் கொடுக்கத்தக்கதாக நமக்கு அளிக்கப்பட்டுள்ள புதிய ஆசீர்வாதங்களாகும். *அப்போஸ்தலர் 2:38; ரோமர் 8:5-25; எபிரெயர் 4:14-16.* இந்தக் கடைசி நாட்களில் தேவன் தமது

ராஜ்யத்தை இஸ்ரவேல் மக்களிடம் இருந்து வெளியே கொண்டுவந்து விட்டார். "தேவனுடைய சபை" என்றும், "தேவனுடைய இஸ்ரவேல்" என்றும் அழைக்கப்படுகின்ற ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு அதை கொடுத்து விட்டார். *கலாத்தியர் 1:13;6:16.* மேலும் நாம் "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருப்பதினால்", புறஜாதிகளாயிருந்தும் நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்றும் அழைக்கப்படுகிறோம். முழு உரிமைபெற்ற ஆபிரகாமுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம். *ரோமர் 9:8,24-26; கலா. 3:26-4:7; எபேசியர் 3:6* பார்க்கவும்.

ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு வாழ்த்துதல் தெரிவித்த கிறிஸ்தவர்களை "கிறிஸ்துவின் சபையார்" என்று பவுல் தெரிவிக்கிறான். *ரோமர் 16:16.* இயேசு தம்முடைய பிதாவுக்காகக் கட்டிக்கொண்டிருக்கும் "தேவனுடைய சபையின்" அங்கத்தினர்கள் என்ற அடையாளமும் நமக்கு உண்டு. *மத்தேயு 16:18; 1 கொரி. 1:2.* நாம் தேவனுடைய ராஜ்யத்தை பெற்றிருக்கிறோம்; ஆகையால், எந்தக் கனி கொடுக்கவேண்டும் என்று யோவான்ஸ்நானன் அன்று யூதர்களை எச்சரித்தானோ, அந்தக் கனியை நாம் கொடுக்கவேண்டுமென்றால், அந்த ராஜ்யம் நம் ஒவ்வொருவருக் குள்ளும் இருக்கவேண்டும். "இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.'' *லூக்கா 3:9.* கிறிஸ்தவர்களே இந்த மரங்கள்; தேவனுடைய ராஜ்யமும் இருக்கின்றது, சாத்தானுடைய ராஜ்யமும் இருக்கின்றது. நாம் ஒன்றைப் பற்றி பிரசங்கிக்கும் போது மற்றொன்றை ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியாது; ஆகையால், "பரலோகத்துக்குப் போவதை" பற்றி நாம் பேசும் போது "நரகத்திற்குப் போகக்கூடிய" வாய்ப்பு இருப்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். *மாற்கு 9:45-48.* உலக ராஜ்யத்திலிருந்து கிறிஸ்தவர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்டு இருக்கிறார்கள். நமக்கு இரட்சிப்பு இருக்கின்றது; ஆனால், அந்த "இரட்சிப்புக்குள் வளரவேண்டியது" அவசியம். *1 பேதுரு 2:2,3.* நம்முடைய செயல்களைப் பற்றி தேவனும் இயேசு கிறிஸ்துவும் எவ்வளவு நன்றாய் அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பது நியாயத்தீர்ப்பு நாளிலே விளங்கும், *யோவான் 5:28-30; 2 கொரி. 5:10.*





'**விசுவாசத்தின் கதவு**'' என்ற தலைப்பு கொண்ட இந்தப் புத்தகத்தின் முன்னுரையில் இவ்வளவு போதனைகளும், உபதேசங்களும் ஏன் சேர்க்கப்பட்டிருக்கின்றன? ''**பெட்டிக்குள் பிறந்தவர்கள்**'' என்ற தலைப்பு கொண்ட அறிமுகப்பகுதி, கிறிஸ்தவர்கள், தேவனுடைய ராஜ்யத்தில் தங்களுக்குரிய பங்கு என்ன என்பதை மனதில் கொண்டவர்களாய் இந்த வேதபாடத்தை புரிந்துகொள்வதற்கு உதவிகரமாக இருக்கும். பரிசுத்த வேதாகமத்தை படித்து, புரிந்துகொண்டு, விசுவாசிக்கும்படி தேவன் நியமித்துள்ள கடமையை ஏற்றுக்கொள்ளும்படி இந்த முன்னுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள உபதேசங்களை புரிந்துகொள்ளும் கிறிஸ்தவர்களை ஊக்குவிப்பதே இந்தப் புத்தகத்தின் நோக்கம். *எபிரெயர் 5:11-14.* இந்த நோக்கத்திற்காகவே இதில் போதனைகளும் உபதேசங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தேவனுடைய ராஜ்யத்தையும், கிறிஸ்துவின் ராஜ்யத்தையும், நீங்கள் ஏன் உருவாக்கப்பட்டீர்கள் என்பதையும் புரிந்துகொள்ளாத கிறிஸ்தவராக நீங்கள் இருந்தால், மனுக்குலத்தைப் பற்றின உங்கள் வேத பாடத்தில் இந்தப் புத்தகம் முக்கிய இடம்பெறவேண்டும். 2–ஆவது பாடத்தை படிக்கும் முன்பாக, முதல் பாடத்திலுள்ள எல்லா வசனங்களையும் கவனமாகப் படியுங்கள். இப்படியாகவே தொடர்ந்து எல்லா பாடங்களுக்கும் செய்யுங்கள். தேவனுடைய காரியங்களைக் கற்றுக்கொள்வது கடினமானதல்ல. ஆகையால், வேத வசனங்களும் கடினமானவைகள் அல்ல. இருப்பினும், தேவனுடைய ராஜ்யத்தைப் புரிந்துகொண்டு, நம்பி, அதன் மீது நம்மால் விசுவாசம் வைக்க முடியாவிட்டால், வேதத்தைக் கற்றுக்கொள்வது நமக்குக் கடினமானதாகவே இருக்கும், இன்னும் சொல்லப்போனால், அது முடியவே முடியாது.

விசுவாசமுள்ளவர்களாய் மனந்திரும்பும் பாவிகளுக்காகப் பலியாவது மட்டும் இயேசு கிறிஸ்துவின் நோக்கம் அல்ல. தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதும் அவருடைய நோக்கம் ஆகும். பார்க்கவும். *லூக்கா 4:43; யோவான் 12:27,28.* மனுஷ ஞானத்துக்கு அப்பாற்பட்ட இயேசு கிறிஸ்துவின் போதனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது நம் கடமை. *யோவான் 8:14-18.*